தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




மலர் : 02 | இதழ் :197 | 4 - பக்கம் | 13.02.2025 | புதன்கிழமை | விலை ரூ,6




**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.**

விளக்கம்:

மன உறுதி கொண்டவர்கள் ஒழுக்கம் தவறுவதால் ஏற்படும் இழிவை உணர்ந்திருப்பதால், நல்லொழுக்கம் குன்றிடுமளவிற்கு நடக்க மாட்டார்கள்.

## பிரதமர் மோடியுடன் சுந்தர் பிச்சை சந்திப்பு: டிஜிட்டல் மாற்றம் குறித்து ஆலோசனை



பாரிஸ்: பாரிஸ் ஏஐ உச்சி மாநாட்டை ஒட்டி பிரதமர் மோடியை சந்தித்த கூகுள் நிறுவன சிஇஒ, பிரதமருடன் இந்தியாவின் டிஜிட்டல் மாற்றம் தொடர்பாக ஆலோசித்ததாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எக்ஸ் சமூகவலைதளத்தில் பகிர்ந்த பதிவில், "பிரதமர் மோடியை சந்தித்ததில் மகிழ்ச்சி. பாரிஸில் நடந்த ஏஐ உச்சி மாநாட்டை ஒட்டி பிரதமரை சந்தித்தேன். ஏஐ தொழில்நுட்பம் இந்தியாவுக்குக் கொண்டுவரக் கூடிய வியத்தகு வாய்ப்புகள் பற்றியும், எப்படி கூகுள் இந்தியாவின் டிஜிட்டல் மாற்றத்துக்கு பங்களிக்க முடியும் என்பது பற்றியும் ஆலோசனை மேற்கொண்டோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் கடந்த 10-ம் தேதி செயற்கை நுண்ணறிவு மாநாடு தொடங்கியது. இதில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் டெல்லியில் இருந்து பாரிஸ் சென்றார். அன்றிரவு பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மெக்ரான், அவருக்கு விருந்து அளித்தார்.

இதைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற 2-வது நாள் செயற்கை நுண்ணறிவு மாநாட்டுக்கு பிரதமர் நரேந்திர மோடி இணை தலைமை ஏற்றார். அப்போது பிரதமர், "ஏஐ தொழில்நுட்பத்தால் வேலைவாய்ப்பு பறிபோகாது. புதிய வகை வேலைவாய்ப்புகள் உருவாகும். ஏஐ தொழில்நுட்பத்துக்கு ஏற்ப இளம் தலைமுறையினருக்கு திறன்சார் பயிற்சி வழங்க வேண்டும். உலக நாடுகளை ஒப்பிடும்போது இந்தியாவில் ஏஐ தொழில்நுட்ப நிபுணர்கள் மிக அதிகமாக உள்ளனர்.

இப்போது ஏஐ தொழில்நுட்ப யுகத்தின் தொடக்கத்தில் இருக்கிறோம். இந்த தொழில்நுட்பத்தால் மனிதர்களைவிட இயந்திரங்கள் புத்திசாலிகளாக மாறிவிடும் என்று சிலர் அஞ்சுகின்றனர். நம்முடைய எதிர்காலத்தை தீர்மானிக்கும் திறவுகோல் நம்மிடமே இருக்கிறது. இந்த பொறுப்புணர்வு நம்மை சரியான பாதையில் வழிநடத்தும். பாரிஸை தொடர்ந்து ஏஐ தொழில்நுட்பம் தொடர்பான அடுத்த சர்வதேச மாநாடு இந்தியாவில் நடத்தப்படும்." என்று கூறினார்.

## சமஸ்கிருதத்தை எதிர்த்த தயாநிதி மாறன்; நீங்கள் எந்த நாட்டவர்? என வினவிய சபாநாயகர்!



புதுடெல்லி: பிப்-13 மக்களவை நடவடிக்கைகள் சமஸ்கிருத மொழியிலும் உறுப்பினர்களுக்கு விளக்கப்படும் என்ற சபாநாயகர் ஓம் பிர்லாவின் அறிவிப்புக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த திமுக எம்பி தயாநிதி மாறன், வரி செலுத்துவோரின் பணத்தை ஏன் வீணாக்க வேண்டும் என்று கேள்வி எழுப்பினார்.

மக்களவையில் நேற்று (பிப். 11) கேள்வி நேரம் முடிந்த உடன் சபாநயகர் ஓம் பிர்லா ஒரு அறிவிப்பை வெளியிட்டார். மக்களவை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, அதன் மொழிபெயர்ப்புகள் உடனுக்குடன் பல்வேறு மொழிகளில் வழங்கப்பட்டு வருகிறது. அந்த மொழிகளின் பட்டியலில், டோக்ரி, போடோ, மைதிலி, மணிப்பூரி, சமஸ்கிருதம், உருது ஆகிய ஆறு மொழிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதன்மூலம், இந்த மொழிகள் மூலமும் உறுப்பினர்களுக்கு ஒரே நேரத்தில் விளக்கம் கிடைக்கும் என தெரிவித்தார்.

மொழிகளின் பட்டியலில் சமஸ்கிருதம் இருப்பதற்கு தயாநிதி மாறன் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இது தொடர்பாக பேசிய அவர், "எந்த மாநிலத்தின் அலுவல் மொழியாக சமஸ்கிருதம் இருக்கிறது என்று சொல்ல முடியுமா? அந்த மொழி தொடர்பு கொள்ள முடியாத நிலையில் உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 73,000 பேர் மட்டுமே சமஸ்கிருதம் பேசுகிறார்கள். உங்கள் ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தால் வரி செலுத்துவோரின் பணத்தை ஏன் வீணடிக்கிறீர்கள்?" என்று கேள்வி எழுப்பினார்.

## மகா கும்பமேளா பக்தர்களால் வாராணசி அயோத்தியில் குவியும் கூட்டம்: விவிஐபி.களுக்கான சிறப்பு வசதிகள் ரத்து



பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவுக்கு வரும் பக்தர்களால் அதை சுற்றியுள்ள வாராணசி, அயோத்தியில் கூட்டம் குவிகிறது. இதனால், இந்த மூன்று நகரங்களிலும் விவிஐபிகளுக்கான சிறப்பு வசதிகளை அரசு ரத்து செய்துள்ளது.

உத்தரபிரதேசம் பிரயாக்ராஜின் திரிவேணி சங்கமத்தில் மகா கும்பமேளா ஜானவரி 13 முதல் நடைபெற்று வருகிறது. இதன் 6 ராஜகுளியல்களில் முக்கிய ஒன்றான மவுனி அமாவாசை ராஜகுளியல் முடிந்த பின்பும் பக்தர்கள் கூட்டம் குறையவில்லை. தொடர்ந்து சராசரியாக நாள் ஒன்றுக்கு 1.44 கோடி பேர் புனித நீராட வருவதாக புள்ளிவிவரம் பதிவாகி உள்ளது.

அதேசமயம், மகா கும்பமேளா வரும் பக்தர்களில் பெரும்பாலானோர் அண்டை நகரங்களான வாராணசி மற்றும் அயோத்திக்கும் செல்கின்றனர். இதனால் இவ்விரு புனித நகரங்களிலும் கூட்டம் குவிந்தபடி உள்ளது.

இச்சூழலில் மகா கும்பமேளாவில் இன்று (பிப்.12) மக் பூர்ணிமாவுக்கான ராஜகுளியல் நடைபெறுகிறது. மகா கும்பமேளாவில் கல்பவாசம் இருந்தவர்கள் அதை முடிக்கும் கடைசி நாளாகும் இது. இந்தமுறை இதுவரை இல்லாத வகையில் சுமார் 10,000 பேர் திரிவேணி சங்மக் கரையில் தங்கி கல்பவாசம் செய்துள்ளனர். இதனால், திரிவேணி சங்கமத்தில் பக்தர்கள் புனித நீராடுவது மேலும் அதிகரிக்க உள்ளது. இதனை கருத்தில் கொண்டு பிரயாக்ராஜ், வாராணசி மற்றும் அயோத்தி வரும் விவிஐபி எனும் அதிமுக்கிய நபர்களுக்கான சிறப்பு வசதிகளை முதல்வர் யோகி ஆதித்யநாத் ரத்து செய்துள்ளார்.

# தமிழகத்தில் ரூ.7,375 கோடிக்கான புதிய தொழில் முதலீடுகள்: அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல்




தமிழகத்தில், பிப்-13 19 ஆயிரம் பேருக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் ரூ.7,375 கோடிக்கான புதிய முதலீடுகளுக்கு பிப்.10-ம் தேதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் 2025-26ம் நிதியாண்டுக்கான பட்ஜெட் விரைவில் தாக்கல் செய்யப்பட உள்ளது. இந்நிலையில், பட்ஜெட் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், பல்வேறு புதிய தொழில் முதலீடுகளுக்கு ஒப்புதல் வழங்கவும் தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் கடந்த பிப்.10-ம் தேதி நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப் பின், செய்தியாளர்களை சந்தித்த வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தமிழகத்தில் ஆட்சேபகரமற்ற நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து வாழ்ந்து வரும் 86 ஆயிரம் பேருக்கு பட்டா வழங்குவது தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல்அளிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இந்நிலையில், தமிழகத்தில் உலகளாவிய திறன் மையங்கள், தோல் அல்லாத காலணி, உணவு பதப்படுத்துதல் போன்ற தொழிற்பிரிவுகளில், 19 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.7,375 கோடி முதலீடுகளுக்கு அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த தொழில் முதலீடுகள் வேலூர், திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, பெரம்பலூர் மாவட்டங்களில் அமைய உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்தாண்டு ஆகஸ்ட் 13-ம் தேதி முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவைக் கூட்டத்தில் தமிழகத்தில், 24,700 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ரூ.44,125 கோடிக்கான 15 புதிய முதலீட்டுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. அத்துடன், பசுமை எரிசக்தி சார்ந்த 3 கொள்கைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதேபோல், கடந்தாண்டு அக்டோபர் 8-ம் தேதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ரூ.38,699 கோடி மதிப்பில் 49,931 பேருக்கு பணி வாய்ப்பு வழங்கும் 14 திட்டங்களுக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது குறிபபிடத்தக்கது.

## கனிமவள கொள்ளையை தடுக்க தவறும் விடியல் அரசு, கண்டுக்கொள்ளாமல் இருக்கும் மாவட்ட நிர்வாகம்




சோலைவனமாக இருந்த நம் பூமியை தினந்தோறும் பல ஆயிரக்கணக்கான கனரக வாகனங்களில் அண்டை மாநிலங்களுக்கு விற்று வரும் அவல நிலையால் தற்போது நம் பூமி பாலை வனமாக நம் கண் முன்னே மாறிவரும் அவலநிலை இதனால் நாம் பல ஆண்டுகள் பின்னோக்கி செல்கிறோம்,,

நாட்டையும் ,நம் இயற்கை வளத்தையும் பாதுகாக்கவேண்டிய நமது அரசே ,நமது முதல்வர்களே அண்டை நாடுகளுடன் கூட்டு ஒப்பந்தம் செய்து பல கோடி ரூபாய்க்கு நம் நாட்டு இயற்கைகளை அழித்து அதனை பணத்திற்காக விற்று வரும் இந்த செயலை எப்படி எடுத்துக்கொள்வது ,எப்படி ஏற்றுக்கொள்வது.

இந் நிலையில் தினந்தோறும் மின்னல் வேகத்தில் கனிமவளங்கள் நம் கண்முன்னே கடத்தி செல்கிறார்கள் அதனை கண்காணிக்ககூடிய சோதனைச் சாவடி உதவி ஆய்வாளர் என்பவரையும் கூட சில கனிம வள கடத்தல் மாபியா கும்பல்கள் மிரட்டுவதாகவும் ,கொலை மிரட்டல் விடுக்கிறார்கள் எனும் அளவிற்கு கனிம வளக் கும்பல்கள் அட்டூழியம் நாளுக்நாள் அதிகரித்து வருகிறது,,அதில் என்ன வியப்பென்றால் அரசு அதிகாரியாக இருந்து வரும் புளியறை சோதனை சாவடி உதவி ஆய்வாளரை மிரட்டியதாகவும் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் ஆதாரங்களுடன் புகார் அளித்தும் கூட இதுவரை அந்த மிரட்டல் கும்பல்கள் மீது எவ்வித நடவடிக்கைகளும் இல்லை என்கிறார்கள் என்றால் சட்டம் யாருக்கு ,யாருக்காக வளைகிறது , ஏன் நடவடிக்கைகள் எடுக்க தயங்குகிறது காவல்துறை என்ற ஐயமும் ,கேள்வியும் எழுகிறது,

கனிம வளக்கொள்ளையை தடுப்பதற்கு தென்மாவட்ட மக்கள் பல அமைப்புகள் போராடி வந்த நிலையில் பொதுமக்கள் மீது வழக்கு போட முன் வந்த அரசு. , கனிம வள கொள்ளையை தடுக் க ஏன் முன் வரவில்லை?

பொது மக்களின் வயித்தெறிச்சலுக்கும் ஒரு நீதி உண்டு என்பதை உணருங்கள் சாது மிரண்டால் காடு தாங்காது, நாடும் தாங்காது, எங்களின் அமைதியும் கூட ஒரு வித போராட்டமே எனவே வெகுண்டெழும் முன்பு எங்களின் இயற்கையை அழித்து எங்களின் கனிமத்தை களவாடுவதை நிறுத்தவேண்டும் என்பதே தென்காசி மற்றும் தென்மாவட்ட மக்களின் நீண்ட நெடிய நாள் கோரிக்கையாக உள்ளது எனவே உறங்கினாலும் விழித்துக்கொண்டு எங்கள் இயற்கை அழுகையின் கண்ணீரையும் எங்கள் மக்களின் கண்ணீரையும் துடைக்க முன் வரவேண்டும் என விடியல் அரசுக்கு கனிவோடு வேண்டுகிறேன். மக்கள் நலனுக்காக உழைப்பவனே மாசற்ற தலைவன்.

## வெற்றிப்பதை வார இதழின் புதிய அத்தியாயமான தின ராஜ்ஜியம் தினசரி காலை நாளிதழ் வெளியீட்டு விழா சிறந்த நிருபர்களுக்கு விருது வழங்கும் விழா



வெற்றிப்பதை வார இதழின் புதிய அத்தியாயமான தின ராஜ்ஜியம் தினசரி காலை நாளிதழ் வெளியீட்டு விழா சிறந்த நிருபர்களுக்கு விருது வழங்கும் விழா ஆசிரியர் வெளியீட்டாளர் தேவரத்னா முனைவர் மு. வரதராஜ் பெருமாள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் தின ராஜ்ஜியம் தினசரி காலை நாளித ழின் முதல் பிரதியை இந்திராசுந்தரம் அறக்கட்டளை யின் நிறுவனத் தலைவர் இந்திராசுந்தரம் மற்றும் V ஜெயம் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் ஜெயம் மங்களம் N மகேந்திர குமார் இருவரும் வெளியிட அர சியல் சூரியன் மாத இதழ் ஆசிரியர் மற்றும் வெளியீட் டாளர் மணிகண்டன் மற்றும் நமது தினக்கனி தினசரி நாளிதழ் ஆசிரியர் வெளியீட்டாளர் கனிராஜாவும் பெற் றுக் கொண்டனர் விழாவின் மற்றொரு நிகழ்வான சிறந்த நிருபர்களுக்கு விருது வழங்கும் விழாவில் நிருபர்கள் மற்றும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த சகா பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் ஊடகத் துறை சார்ந்த நண் பர்களுக்கு விருதுகள் வழங்கிக் கொண்டிருக்கிறது. இவ்விழாவில் அரசியல் மாற்றம் ஆசிரியர் அருள்கு மார் அரசியல் விகடன் ஆசிரியர்கருடன் மாத இதழ் ஆசி ரியர் ரமேஷ் அருண்குமார் அரசியல் ஆதாயம் ஆசிரியர் பிரபு கூட்டில் முயற்சிய ஆசிரியர் சூரியகுமார் அகத்தியர் அதிகாரம் ஆசிரியர் மணி தின ஓசை இணை ஆசிரியர் லோகநாதன் ஏரியா டக் ஆசிரியர் காளிதாஸ் வெற்றிப் பாதை வார இதழின் சிறப்பு ஆசிரியர் விஜயபாஸ்கர் மற் றும் நிருபர்கள் ராஜேஷ் கண்ணா அருண் கிஷோர் ராஜா ராம் சக்திவேல் சக்திவேல் சித்ரா பாஸ்கரன் தினராஜ்யம் இணை ஆசிரியர் மகாதேவி நேமம் நியூஸ் உதவி ஆசிரி யர் முருகேசன் மற்றும் பல ஊடக நிருபர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# சென்னை ரயில்வே கோட்டத்துக்கு ஐசிஎஃப்-பில் முதல் ஏசி மின்சார ரயில் தயாரிப்பு பணி நிறைவு




தயாரிக்கப்பட்டு, தயாராக இருக்கும் முதல் ஏசி மின்சார ரயில். (உள்படம்) ஏசி மின்சார ரயிலின் உட்புற தோற்றம்.

சென்னை: தெற்கு ரயில்வேயில், சென்னை ரயில்வே கோட்டத்துக்கான முதல் ஏசி மின்சார ரயில் தயாரிக்கும் பணி ஐசிஎஃப்-பில் நிறைவடைந்துள்ளது.

சென்னை கடற்கரை - செங்கல்பட்டு வழித்தடத்தின் விரைவுப் பாதையில் ஏ.சி. மின்சார ரயில் இயக்க ரயில்வே வாரியத்திடம் தெற்கு ரயில்வே கடந்த 2019-ம் ஆண்டு பரிந்துரை செய்தது.

இதையடுத்து, ஏசி மின்சார ரயில்களை தயாரித்து வழங்க சென்னை ஐசிஎஃப்-க்குரயில்வே வாரியம் உத்தரவிட்டது. அதன்படி, 12 பெட்டிகள் கொண்ட ஏசி மின்சார ரயில் தயாரிப்பு பணி கடந்த மாதம் தொடங்கி, நடைபெற்று வந்தது. இந்நிலையில், இப்பணி தற்போது நிறைவடைந்துள்ளது.

இதுகுறித்து ஐசிஎஃப் அதிகாரிகள் கூறியதாவது: சென்னை ஐசிஎஃப்.-பில் 12பெட்டிகள் கொண்ட புது வகை ஏசி மின்சார ரயில் கடந்த 2018-ம் ஆண்டு முதல் தயாரிக்கப்படுகின்றன. மும்பை உள்ளிட்ட இடங்களில் தற்போது ஏசி மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. இதற்கிடையே, சென்னைக்கு 2 ஏசி மின்சார ரயில் தயாரிக்கரயில்வே வாரியம் உத்தரவிட்டது. தற்போது, முதல் ஏசி மின்சார ரயில் தயாரிப்பு பணி முடிக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் முழுமையாக குளிர்சாதன வசதி கொண்டது. மொத்தம் 12 பெட்டிகள் உள்ளன. இந்த ரயிலில் அமர்ந்தபடி 1,116 பேரும், நின்றுகொண்டு 3,798 பேரும் என மொத்தம் 4,914 பேர் பயணிக்க முடியும்.

அதிகபட்சமாக மணிக்கு 110 கி.மீ., வேகத்தில் செல்லும் திறன் கொண்டது. தானியங்கி கதவுகள், ஜிபிஎஸ். அடிப்படையிலான தகவல் வசதி மற்றும் அறிவிப்பும் உள்ளன. அனைத்து ரயில் பெட்டிகளிலும் சிசிடிவி கேமராக்கள் இருக்கும். இந்த ரயில் தெற்கு ரயில்வேயிடம் விரைவில் ஒப்படைக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

இந்த ஏசி மின்சார ரயில், சென்னை ரயில்வே கோட்டத்துக்கான முதல் ரயிலாகும். சென்னை கடற்கரை – செங்கல்பட்டு தடத்தில் இந்த ரயிலை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மற்ற மின்சார ரயில்களை விட இதில் கட்டணம் சற்று அதிகமாக இருக்கும் என்று ரயில்வே வட்டாரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முருகனீன் அருள் ஞானத்துடன் நம்மை வழிநடத்தட்டும்: தைப்பூசத்தையொட்டி தலைவர்கள் வாழ்த்து



வேல் ஏந்தி காத்தருளும் தமிழ் கடவுள் முருகனின் அருள், ஞானத்துடன் நம்மை வழிநடத்தட்டும் என தைப்பூசத் திருநாளில் பிரதமர் மோடி, மத்திய அமைச்சர் அமித்ஷா, ஆளுநர் ஆர்.என்.ரவி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

பிரதமர் மோடி: அனைவருக்கும் மகிழ்ச்சியான ஆசிர்வதிக்கப்பட்ட தைப்பூச திருநாள் வாழ்த்துக்கள். முருகனின் தெய்வீக அருள் நம்மை வலிமை, செழிப்பு மற்றும் ஞானத்துடன் வழிநடத்தட்டும். இந்த புனிதமான நாளில் அனைவருக்கும் மகிழ்ச்சி, நல்ல ஆரோக்கியம், வெற்றிக்காக பிரார்த்திக்கிறேன். இந்நாள் நம் வாழ்வில் அமைதியையும், நேர்மறையையும் கொண்டு வரட்டும் வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா.

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா: தைப்பூச திருநாளில் தமிழக மக்களுக்கு என் இனிய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். முருகனின் தெய்வீக அருள் அனைவரது வாழ்க்கையிலும் மகிழ்ச்சி, செழிப்பு, நல் ஆரோக்கியத்தை ஒளிரச்செய்யட்டும்.

ஆளுநர் ஆர்.என்.ரவி: விஷேசமிக்க தைப்பூசத் திருநாளில் உலகமெங்கும் உள்ள தமிழக சகோதர, சகோதரிகளுக்கு முருகனின் நிரந்தர ஆசி கிடைக்க வேண்டிக்கொள்கிறேன். முருகப் பெருமான் 2047-ம் ஆண்டுக்குள் இந்தியாவை முழுமையாக வளர்ச்சி அடையச் செய்யும் நமது தேசிய நோக்கத்துக்கான பாதையை ஒளிரச் செய்வாராக.

முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன்: வேலை வணங்கும் பக்தர்களுக்கு நல்ல வேலையை அருள்வான் முருகன். பன்னிரு கைகளால் நம்மை காக்கும் முருகனின் தைப்பூச திருநாளில் அனைவருக்கும் எனது வாழ்த்துக்கள்.

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: வேல் ஏந்தி நம்மை காத்தருளும் தமிழ் கடவுள் முருகனின் தைப்பூச நன்னாளில், உலகத் தமிழர்கள் வாழ்வெல்லாம் மலர, தொட்டது யாவும் துலங்க, வெற்றி மேல் வெற்றி சேர முருகனின் பூரண அருளை வேண்டி வழிபடுவோம்.

முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம்: காட்டுக்குள் நடமாடி, நாட்டுக்குள் முடிசூடி, மக்களின் மனங்களில் நிறைந்திருக்கும் முருகனின் அருள் பெற்று, அனைவரும் உடல் ஆரோக்கியத்தோடும், மகிழ்ச்சியோடும் வாழ முருகனை பிரார்த்திக்கிறேன்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை: முருகனின் அருளால் தமிழக மக்கள் அனைவரது வாழ்விலும், மகிழ்ச்சியும், அமைதியும் பெருகவும், அனைத்து வளங்களும் கிடைக்கவும் தைப்பூசத் திருநாளில் வேண்டிக்கொள்கிறேன்.

பாமக நிறுவனர் ராமதாஸ்: உலகமெங்கும் வாழும் தமிழர்களை ஓரணியில் இணைக்கும் திருநாளான தைப்பூசத் திருவிழாவில், தமிழர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமாகா தலைவர் ஜி.கே.வாசன்: உலகமெங்கும் வாழும் தமிழர்களின் ஆன்மிகப் பணி தொடர்ந்து சிறந்து விளங்க தைப்பூசத் திருநாளில் இறைவனை வணங்கி வேண்டுகிறேன்.


அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: ஆன்மீக அற்புதங்கள் நிறைந்த இந்நாளில் முருகனின் அருள் நாட்டு மக்கள் அனைவரின் வாழ்விலும் அமைதியையும், அளவில்லா மகிழ்ச்சியையும் வழங்கட்டும்.

நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்: தலைநிலக் குறிஞ்சி தந்த தலைவன். தமிழ் இறைவன் முருகப் பெருமானின் திருப்புகழை போற்றுவோம்.

தவெக தலைவர் விஜய்: தனித்துயர்ந்த குன்றுகள் தோறும் வீற்றிருக்கும் தமிழ் நிலக் கடவுள். உலகமெங்கும் வாழும் தமிழர்களின் தனிபெரும் கடவுள் முருகப் பெருமானைப் போற்றுவோம். அனைவருக்கும் தைப்பூசத் திருநாள் வாழ்த்துக்கள்.

இவர்களுடன் சமத்துவ மக்கள் கழக தலைவர் எர்ணாவூர் நாராயணன் உள்ளிட்டோரும் தைப்பூசத்துக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

# தமிழகம் முழுக்க திமுகவுக்கு ஆதரவான சூழலே நிலவுகிறது - அமைச்சர் செந்தில்பாலாஜி



சென்னை: பிப்-13

'தமிழகம் முழுக்க திமுகவுக்கு ஆதரவான சூழலே நிலவுகிறது. இது 2026 தேர்தலிலும் எதிரொலிக்கும்' என அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பகிர்ந்துள்ள பதிவில், "நடந்து முடிந்த ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல், மக்கள் நலனுக்காக அனுதினமும் உழைத்து வரும் முதல்வரின் உழைப்புக்கும், திராவிட மாடல் அரசுக்கும், பெரியாரை இகழ்ந்து அரசியல் செய்ய நினைத்த அற்ப பதர்களை ஓடவிட்ட தமிழ்நாட்டு மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி!

குரங்கு கையில் சிக்கிய பூமாலையாய் தன் கைக்கு கிடைத்த கட்சியை சீரழித்து சின்னாபின்னமாக்கி தோல்வி மேல் தோல்வி கண்டு 'தோல்விசாமி' இல்லாத பொய்களை வீசுவதே அன்றாட அலுவலாக வைத்திருக்கிறார். அதனால்தான் மக்களை சந்திக்க முடியாமலும் திமுகவை எதிர்க்க துணிவில்லாமல் தேர்தலை சந்திக்காமல் ஓடி ஒளிந்து கொண்டார்.

வாக்களித்த மக்களுக்கு மட்டுமல்லாமல்வாக்களிக்காத மக்களின் நலனுக்காகவும் இந்த அரசு பாடுபடும் என அறிவித்து செயல்பட்டார் தமிழக முதல்வர். அதன் காரணமாக இன்று ஈரோடு கிழக்கில் அதிமுக வாக்குகள் அனைத்தும் திமுகவுக்கு வந்துள்ளது.

தமிழ்நாடு முழுக்க திமுகவிற்கு ஆதரவான சூழலே நிலவுகிறது; "Pro Incumbency" தான் எங்கும் எதிரொலிக்கிறது. முதல்வர் ஸ்டாலினின் அலைதான் தமிழ்நாடு முழுக்க அடித்துக் கொண்டிருகிறது. இது 2026 தேர்தலிலும் எதிரொலிக்கும்!." என்று கூறியுள்ளார்.

# விஜய் கட்சி நிர்வாகிகளுடன் 2-வது நாளாக பிரசாந்த் கிஷோர் ஆலோசனை: தவெகவுக்கு வியூகங்கள் வகுக்க ஒப்பந்தம்?




பிரபல தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோருடன் தவெக தலைமை நிர்வாகிகள் நேற்று சந்தித்து பேசினர். இதில் தவெகவுக்கு 15 முதல் 20 சதவீத வாக்கு வங்கி இருப்பதாக அளிக்கப்பட்ட அறிக்கை குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதனிடையே விஜய் கட்சிக்கு தேர்தல் வியூகங்கள் வகுக்க பிரசாந்த் கிஷோர் ஒப்பந்தம் செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையில் தவெக தலைவர் விஜய்யின் வீட்டில், அவரை பிரசாந்த் கிஷோர் நேற்று முன்தினம் சந்தித்து ஆலோசனையில் ஈடுபட்டார். தொடர்ந்து சுமார் இரண்டரை மணி நேரமாக தேர்தல் வியூகங்கள் தொடர்பாக அவர்கள் ஆலோசித்தனர். இதைத் தொடர்ந்து அன்றைய தினம் இரவே அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியுடனும் பிரசாந்த் கிஷோர் ஆலோசனையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. ஏற்கெனவே, பிரசாந்த் கிஷோரை அதிமுக தரப்பில் அணுகிய நிலையில், அவரே 'யார் அந்த சார்' என்னும் வியூகத்தை முன்வைத்து திமுகவுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுக்க ஆலோசனை வழங்கியதாக சொல்லப்பட்டது. அதன் பின்னர் இதேபோல் அவ்வப்போது ஆலோசனைகளை மட்டும் அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம் என அதிமுக தரப்பில் முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே அவர் தவெகவுடன் ஆலோசனை நடத்தினார். இதைத் தொடர்ந்து அவர் பழனிசாமியையும் சந்தித்திருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சூழலில், பிரசாந்த் கிஷோருடன் தவெகவின் தலைமை நிர்வாகிகள் நேற்று மீண்டும் ஆலோசனை நடத்தினர். அதன்படி, கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த், பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா, தேர்தல் வியூக வகுப்பாளர் ஜான் ஆரோக்கியசாமி ஆகியோர் ஆலோசனையில் ஈடுபட்டனர். இதில், தவெகவுக்கு வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் எவ்வளவு வாக்கு சதவீதம் கிடைக்கும் என்பது குறித்து கலந்தாய்வு செய்தனர். அப்போது, அண்மையில் பிரசாந்த் கிஷோர் தரப்பில் எடுக்கப்பட்ட தரவுகளின்படி முக்கிய புள்ளி விவரங்கள் அடங்கிய அறிக்கையை வழங்கியதாகக் கூறப்படுகிறது. அதில் இடம்பெற்ற விவரங்கள்: 15 முதல் 20 சதவீத வாக்குகள் தவெகவுக்கு கிடைக்கும். தமிழகத்தில் தவெகவுக்கு வாக்கு சதவீதம் அதிகமாக இருக்கும் இடங்கள். கட்சிக்கு வாக்களிக்க எந்த வயதினர் தயாராக இருக்கின்றனர். அடுத்து வரும் 11 மாதங்களில் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்பன உள்ளிட்ட பல்வேறு விவரங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

ஒரு வீட்டுக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட ஆலோசனைகளை அவர் வழங்கியிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு பிரசாந்த் கிஷோருடனான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, அவர் வழங்கிய அறிக்கையை தவெக தலைவர் விஜயிடம் பொதுச்செயலாளர் ஆனந்த் உள்ளிட்டோர் அளித்திருக்கின்றனர். இதன் அடிப்படையில் அடுத்தகட்ட பணிகள் மேற்கொள்ளப்படும் என கட்சி நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

குழந்தைகள் அணி: இதற்கிடையே, தவெகவின் அணிகள் தொடர்பான அறிவிப்பும் நேற்றைய தினம் வெளியானது. அதில் கூறியிருப்பதாவது: தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பு அணிகளாக 28 அணிகள் உருவாக்கப்படுகின்றன. அதன்படி, மூன்றாம் பாலினத்தவர், காலநிலை மாற்றம், தகவல் சரிபார்ப்பு, இளைஞர் அணி, குழந்தைகள் அணி, மாற்றுத்திறனாளிகள் அணி, பெண்கள் அணி, இளம்பெண்கள் அணி, ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள் அணி, உறுப்பினர் சேர்க்கை அணி, அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம் உள்ளிட்ட அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்த அணிகளின் பொறுப்பாளர்களுடைய பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# எரிமலையா... பனீமலையா..? - என்ன செய்யப் போகிறார் செங்கோட்டையன்?



அமைதிக்கு பேர் போன செங்கோட்டையன் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு அத்திக்கடவு - அவிநாசி திட்டத்தை செயல்படுத்தியமைக்காக அன்னூர் கஞ்சப்பள்ளியில் நடந்த பாராட்டு விழாவை புறக்கணித்திருப்பது அதிமுக-வுக்குள் பெரும் விவாதத்தை எழுப்பி இருக்கிறது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு, 'இந்து தமிழ் திசை'க்கு செங்கோட்டையன் அளித்த நேர்காணலில், "அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டவர்களை இணைப்பது தொடர்பான பேச்சு நடக்கிறது" என உறுதிப்படுத்தியதுடன், இது தொடர்பாக முன்னாள் அமைச்சர்கள் - இபிஎஸ்சை சந்தித்தது உண்மைதான் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

"நீக்கப்பட்டவர்களைச் சேர்க்க வாய்ப்பே இல்லை. இதுவிஷமாக முன்னாள் அமைச்சர்கள் என்னை சந்திக்கவில்லை" என்று பொதுவெளியில் மறுத்து வந்த இபிஎஸ்சுக்கு, செங்கோட்டையனின் இந்த விளக்கம் தர்மசங்கடத்தை ஏற்படுத்தியது. இந்த நேர்காணல் தொடர்பாக பல்வேறு விவாதங்கள் நடந்து முடிந்த நிலையில், தற்போது இபிஎஸ்சுக்கு நடந்த பாராட்டு விழாவை செங்கோட்டையன் புறக்கணித்துள்ளார்.

இதற்கு, "எங்களை உருவாக்கிய தலைவர்களான எம்ஜிஆர் - ஜெயலலிதா படங்கள் அழைப்பிதழிலும், மேடையிலும் இல்லாததால், என் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், இந்த விழாவில் பங்கேற்கவில்லை" என்று செங்கோட்டையன் விளக்கம் அளித்துள்ளார். அதோடு, சென்னையில் நடந்த டெல்லி அதிமுக அலுவலக திறப்பு விழா நிகழ்வையும் புறக்கணித்து, தலைமைக்கு எதிரான தனது அதிருப்தியையும் வெளிப்படுத்தி இருக்கிறார்.

தனது இந்த நடவடிக்கைகள் மூலம் செங்கோட்டையன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளாரா அல்லது கட்சி தலைமைக்கு எதிராக தனது ஆவேசத்தை வெளிப்படுத்தியுள்ளாரா என்பது தற்போதைய விவாதப் பொருளாக மாறியுள்ளது. எம்ஜிஆர், ஜெயலலிதாவை முன் நிறுத்தி, செங்கோட்டையன் எழுப்பியிருக்கும் இந்த 'உரிமைக்குரல்' மாநிலம் முழுவதும் உள்ள கட்சி நிர்வாகிகள் மத்தியில், 'உரத்த குரலாக' பரவி, விவாதத்தை தொடங்கி வைத்துள்ளது.

அத்திக்கடவு - அவிநாசி திட்டத்திற்கு முதற்கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போது பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த ஈரோடு கே.வி.ராமலிங்கமும், இபிஎஸ் பாராட்டு விழாவை புறக்கணித்துள்ளதையும் இதில் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. கூடவே, இந்த நிகழ்வு தொடர்பாக, டிடிவி தினகரன் மற்றும் அமைச்சர் ரகுபதியின் கருத்துகள், முன்னாள் அமைச்சர் கோகுல இந்திராவின் அதிருப்தி குரல் என பல தொடர்வினைகள் வெளியாகி பரபரப்புக்கு தூபம் போட்டுள்ளது.

இதற்கு நேரடியாக பதில் தராத இபிஎஸ், "அது கட்சி நிகழ்ச்சி அல்ல" என்ற எளிமையான ஒரு பதிலை ஜெயக்குமார் மூலம் சொல்லி கடந்து போயிருக்கிறார். செங்கோட்டையன் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிய ஈரோடு அதிமுக நிர்வாகிகள் சிலரிடம் பேசினோம். "ஜெயலலிதா மறைவிற்கு பின் தன்னைத் தேடி வந்த தலைமை பதவியை தவிர்த்தவர் செங்கோட்டையன்.

அவருக்கும் இபிஎஸ்சுக்கும் இடையே, தற்போது சுமுக உறவு இல்லை என்பது உண்மை. முக்கிய முடிவுகளை எடுக்கும் போது, இபிஎஸ் தன்னிடம் கலந்து கொள்வதில்லை என்ற வருத்தம் தொடர்கிறது. இதனால், சென்னை வரும்போது, தலைமைக்கழகத்திற்கு செல்வதைக்கூட தவிர்த்து விடுகிறார்.

இந்த நிலையில், ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல், ஈரோடு மாவட்ட அதிமுக நிர்வாகிகள் நியமனம் போன்றவற்றில் கூட இவரின் கருத்துக்குஉரிய முக்கியத்துவம் கிடைக்கவில்லை. அதோடு, இபிஎஸ்சுக்கான பாராட்டு விழா தொடர்பாக எந்த தகவலையும் செங்கோட்டையனுக்கு முன்கூட்டியே தெரிவிக்கவில்லை.

எஸ்.பி.வேலுமணியின் வழிகாட்டுதலில், இபிஎஸ் புகழ்பாடும் விழாவாக இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது. விழா அழைப்பிதழை பார்த்தாலே அது தெரியவரும். இவற்றின் உச்சமாக, எம்ஜிஆர், ஜெயலலிதா படங்களை விழா மேடையிலாவது சேர்க்க வேண்டும் என தான் சொல்லி அனுப்பியும், அதனை புறக்கணித்தது, கூடுதல் வருத்தத்தை ஏற்படுத்தியதால், விழாவில் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை. இந்த காரணத்தை வெளிப்படையாக தெரிவித்த பிறகும், இபிஎஸ் அல்லது வேலுமணி போன்றோர் அவரிடம் பேசி சமாதானப்படுத்த இதுவரை முயற்சி எடுக்கவில்லை.

இப்படியாக, அவருக்கு அதிருப்தி ஏற்படுத்தும் பல சம்பவங்கள், காரணங்கள் தொடர்ந்தாலும், இபிஎஸ்சுக்கு எதிராக கொடி பிடிக்கும் மனநிலையில் தற்போது செங்கோட்டையன் இல்லை. தன்னை அடையாளப்படுத்திய கட்சியின் நலன் மட்டுமே அவருக்கு முதன்மையாக உள்ளது.

## சிறுமியை ,நிலாப்பெண்ணாக, தேர்வு செய்து வழிபாடு: வேடசந்தூர் அருகே பாரம்பரிய திருவிழா



வேடசந்தூர்: பிப்-13

ஆண்டுதோறும் தை மாதம் பவுர்ணமி அன்று, நிலாப்பெண்ணாக சிறுமியை தேர்வு செய்து இரவு முழுவதும் பெண்கள் மட்டும் பங்கேற்று வழிபடும் பாரம்பரிய திருவிழா செவ்வாய்க்கிழமை இரவு கோட்டூர் கிராமத்தில் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் அருகேயுள்ள குட்டம் ஊராட்சி கோட்டூர் கிராமத்தில் ஒவ்வொரு ஆண்டும் தை மாதம் பவுர்ணமி நாளான்று இரவில் நிலாப்பெண் வழிபாடு நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான வழிபாட்டிற்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக கிராமத்தில் வசிக்கும், ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள சிறுமிகளின் பெயர்களை எழுதி குலுக்கள் முறையில், ஒரு சிறுமி நிலாப்பெண்ணாக தேர்வு செய்யப்படுவார்.

இவ்வாறு தேர்வு செய்யப்படும் சிறுமிக்கு கிராமமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து பால், பழம் உள்ளிட்ட உணவுப்பொருட்களை கோயிலில் வைத்து சிறுமிக்கு வழங்குவர். இந்த ஆண்டு நிலாப்பெண்ணாக கோட்டூர் அருகே தலையூத்துப்பட்டி கிராமத்தை சேர்ந்த ஆனந்தன்-தமிழ்செல்வி தம்பதியின் மகள் தீக்ஷா(13) தேர்வு செய்யப்பட்டார். இவர், எட்டாம் வகுப்பு படித்துவருகிறார்.

தை மாதம் பவுர்ணமி முழுநிலவு நாளான நேற்று இரவு (செவ்வாய்கிழமை இரவு பிப்.,11) சிறுமிக்கு புத்தாடை அணிவித்து ஆவாரம்பூக்கள் மாலையிட்டு அலங்கரித்து, தலையில் ஆவாரம் பூக்கள் நிரம்பிய கூடையை சுமக்க செய்து சிறுமியை ஊருக்கு வெளியே உள்ள மாசடைச்சி அம்மன் கோயிலுக்கு அழைத்துவந்தனர்.

அங்கு சிறுமியை அமரவைத்து இரவு முழுவதும் கும்மியடித்து நிலா பாடல்கள் பாடி வழிபாடு நடத்தினர். விடிவதற்கு முன்பு கோயில் வளாகத்தில் பெண்கள் ஒன்று சேர்ந்து பொங்கல் வைத்தனர். தொடர்ந்து அதிகாலையில், சிறுமியை அழைத்துச்சென்று அருகேயிருந்த நீர்நிலையில் தீபம் ஏற்றச்செய்து வழிபட்டனர்.

இதுகுறித்து கிராமமக்கள் கூறுகையில், எங்கள் கிராமத்தில் உள்ள சிறுமியை நிலாப்பெண்ணாக தேர்வு செய்து தை பவுர்ணமி நாளில் வழிபாடு நடத்துவது என்பது தொன்று தொட்டு வருகிறது. எங்கள் முன்னோர் சொல்லிச்சென்ற பாதையில் இந்த விழாவை நடத்திச்செல்கிறோம். இந்த பாரம்பரிய வழிபாட்டுமுறையை அடுத்தடுத்து தலைமுறைகளுக்கும் கடத்துகிறோம். சிறுமியை நிலாப்பெண்ணாக பாவித்து வழிபடுவதன் மூலம் விவசாயம் செழிக்கும், கிராமமக்கள் நோய்நொடியின்றி ஆரோக்கிய வாழ்க்கை என வளம் பெறுவர் என்ற நம்பிக்கை உள்ளது, என்றனர்.

## பாலியல் வன்கொடுமைகள் | திமுக அரசைக் கண்டித்து பிப்.18-ல் அதிமுக கண்டன ஆர்ப்பாட்டம்



சென்னை: பிப்-13

"பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகளை கட்டுப்படுத்தத் தவறிய திமுக ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்து அதிமுக மாணவர் அணி சார்பில், பிப்.18ம் தேதி, சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்," என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் திமுக ஸ்டாலின் மாடல் அரசு பதவியேற்றதில் இருந்து, பள்ளி, கல்லூரி மாணவிகள், சிறுமிகளுக்கு எதிராக பல்வேறு பாலியல் வன்கொடுமைச் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. அதே போல், கொலை, கொள்ளை, வழிப்பறி, ஆள்கடத்தல் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோதச் செயல்களும் சர்வ சாதாரணமாக நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக, தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு முற்றிலுமாக சீர்கெட்டுள்ளது.

அந்த வகையில், திமுக ஸ்டாலின் மாடல் ஆட்சியில், பள்ளி மாணவிகள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக, எனக்குக் கிடைத்த தகவல்களின்படி, கடந்த நவம்பர் மாதம் முதல் தற்போதுவரை நடைபெற்ற பாலியல் வன்கொடுமைகளில் ஒருசிலவற்றை மக்களுக்கு நினைவுபடுத்த கடமைப்பட்டுள்ளேன்.

- அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு இழைக்கப்பட்ட அநீதி. `யார் அந்த சார்?'
- கிருஷ்ணகிரியில் 13 வயது அரசுப் பள்ளி மாணவியை மூன்று ஆசிரியர்கள் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்த நிகழ்வு!
- வேலூரில், இளம் பெண்ணுக்கு மயக்க மருந்து கலந்த குளிர்பானம் கொடுத்து, ஆறு பேர் கொண்ட காமுக கும்பல் கூட்டுப் பாலியல் பலாத்காரம் செய்த கொடூரம்!
- தூத்துக்குடியில் 5 மாணவிகளுக்கு உடற்கல்வி ஆசிரியரால் பாலியல் தொல்லை.
- சென்னையில் சிறுமிக்கு கிக்பாக்சிங் பயிற்சியாளரால் பாலியல் சீண்டல்.
- திருப்பூரில் 17 மாணவிகளுக்கு, விடுதி வார்டனால் பாலியல் தொல்லை.
- திருவள்ளூரில் மூன்றாம் வகுப்பு மாணவிக்கு தலைமை ஆசிரியரால் பாலியல் தொல்லை.
- சென்னையில் மனவளர்ச்சி குன்றிய கல்லூரி மாணவி, 10-க்கும் மேற்பட்டோரால் பாலியல் வன்கொடுமை.
- சென்னையில் ஓட்டுநர் பயிற்சிக்கு வந்த கல்லூரி மாணவிக்கு, பயிற்சியாளரால் பாலியல் தொல்லை.
- தஞ்சாவூரில் இளம் பெண்ணுக்கு கல்லூரி ஆசிரியரால் பாலியல் தொல்லை.
- தருமபுரியில் 3 சிறுமிகளுக்கு ஓட்டுநரால் பாலியல் தொல்லை.
- கும்பகோணத்தில் கல்லூரி மாணவிக்கு அரபி வகுப்பு ஆசிரியரால் மூன்று ஆண்டுகளாக பாலியல் வன்கொடுமை.
- சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில், மூன்றாம் ஆண்டு மருத்துவம் பயிலும் மாணவிக்கு பாலியல் தொந்தரவு.
- திருவண்ணாமலையில், 10-ஆம் வகுப்பு மாணவிக்கு ஆசிரியரால் பாலியல் சீண்டல்.
- சென்னை, IIT-யில் Ph.D., மாணவியிடம் பேக்கரி ஊழியர் பாலியல் சீண்டல்.
- திருப்பூரில் அரசுப் பள்ளி மாணவியிடம் ஆசிரியர் பாலியல் தொல்லை.
- கன்னியாகுமரியில் ஓடும் பேருந்தில் சிறுமிக்கு போதை ஆசாமியால் பாலியல் தொந்தரவு.
- சென்னையில் மூன்று பள்ளி மாணவிகளுக்குக் கூட்டுப் பாலியல் வன்கொடுமை.
- ஓசூரில் 11 வயது சிறுமிக்கு பாலியல் சீண்டல்.
- விழுப்புரத்தில் 4 வயது பெண் குழந்தைக்கு பாலியல் தொல்லை.
- சென்னை, கிளாம்பாக்கம் பேருந்து நிலையம் அருகே 18 வயது இளம் பெண் ஆட்டோவில் கடத்தப்பட்டு பாலியல் துன்புறுத்தல்.
- திருச்சி, மணப்பாறையில் 2 மாணவிகளுக்கு, தாளாளரின் கணவர் உள்ளிட்ட 5 பேர் பாலியல் சீண்டல்.
- கோவையில் 14 வயது பள்ளி மாணவிக்கு ஆட்டோவில் பாலியல் தொல்லை.
- விழுப்புரத்தில் கல்லூரி மாணவிக்கு பேராசிரியரால் பாலியல் தொல்லை.
- திருப்பூரில் மாநகராட்சிப் பள்ளி மாணவிகளுக்கு ஆசிரியரால் பாலியல் சீண்டல்.
- புதுக்கோட்டையில் பள்ளி மாணவிக்கு உடற்கல்வி ஆசிரியரால் பாலியல் தொல்லை.

திமுக ஸ்டாலின் மாடல் ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மை காரணமாக, பள்ளி, கல்லூரி முதல் பல்கலைக்கழகம் வரை, அனைத்து இடங்களிலும் மாணவிகளுக்கு எவ்வித அச்சமும் இன்றி சர்வ சாதாரணமாக பாலியல் வன்கொடுமை நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள் மிகுந்த அச்சமும், கவலையும் அடைந்துள்ளனர். இந்த அவல நிலைக்குக் காரணமான திமுக அரசின் முதல்வர் ஸ்டாலினுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு, பள்ளி, கல்லூரி மாணவிகள் மற்றும் சிறுமிகளுக்கு எதிராக நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகளை கட்டுப்படுத்தத் தவறிய திமுக ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்தும்; குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க வலியுறுத்தியும், அதிமுக மாணவர் அணியின் சார்பில், பிப்.18ம் தேதி, செவ்வாய் கிழமை காலை 10.30 மணியளவில், சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், முன்னாள் அமைச்சர் பா. வளர்மதி தலைமையிலும், மாணவர் அணிச் செயலாளர் சிங்கை ராமச்சந்திரன் முன்னிலையிலும் நடைபெறும். நிர்வாகத் திறனற்ற திமுக ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்து நடைபெற உள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாணவர் அணியினர் உள்ளிட்டோர் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன், என்று அவர் கூறியுள்ளார்.

## ஐஏஎஸ் அதிகாரிகளை அடிக்கடி மாற்றி அரசு நிர்வாகத்தை முடக்கக் கூடாது: ராமதாஸ் கண்டனம்



சென்னை: பிப்-13

ஐஏஎஸ் அதிகாரிகளை அடிக்கடி மாற்றி அரசு நிர்வாகத்தை முடக்கக் கூடாது என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாட்டில் பல்வேறு முக்கியத் துறைகளின் செயலாளர்கள் உள்ளிட்ட 38 ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது அரசு அதிகாரிகள் மத்தியில் அதிருப்தியையும், முணுமுணுப்பையும் ஏற்படுத்தியிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிக்கின்றன. கடந்த ஜனவரி 31-ஆம் தேதி 31 அதிகாரிகள் மாற்றப்பட்ட நிலையில், அடுத்த 10 நாட்களில் 38 அதிகாரிகள் மாற்றம் செய்யப்பட்டிருப்பது தேவையற்றது.

அரசு நிர்வாக வசதிக்காக அதிகாரிகளை இடமாற்றம் செய்வதற்கான அனைத்து அதிகாரங்களும், உரிமைகளும் அரசுக்கு உண்டு. ஆனால், அவ்வாறு செய்யப்படும் மாற்றங்கள் அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். மாறாக நிர்வாகத்தின் செயல்பாட்டை முடக்குவதாக இருக்கக் கூடாது. இப்போது செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்த எந்த வகையிலும் உதவாது.

எடுத்துக்காட்டாக, கடந்த ஜூலை மாதத்தில் தான் சுற்றுச்சூழல் துறை செயலாளராக இருந்த சுப்ரியா சாகு மருத்துவத்துறை செயலாளராகவும், அதற்கு சில மாதங்களுக்கு முன்பு வரை மருத்துவத்துறை செயலாளராக இருந்த செந்தில்குமார் சுற்றுச்சூழல் துறை செயலாளராகவும் மாற்றப்பட்டனர்.

அடுத்த 6 மாதங்களில் இருவரும் தங்களின் பழைய துறைகளுக்கே மாற்றப்பட்டுள்ளனர். அப்படியானால், என்ன காரணத்திற்காக அவர்கள் ஏற்கெனவே இடமாற்றம் செய்யப்பட்டனர்? இப்போது என்ன காரணத்திற்காக அவர்கள் மீண்டும் பழைய துறைகளுக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்? என்ற வினா மக்கள் மனங்களில் எழுகிறது. அவற்றுக்கு விடையளிக்க வேண்டிய கடமை அரசுக்கு உள்ளது.

கடந்த அக்டோபர் மாதத்தின் மின்வாரியத் தலைவராக நியமிக்கப்பட்ட நந்தகுமார், உயர்கல்வித்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட கோபால், கடந்த ஜூலை மாதத்தில் பொதுப்பணித்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட மங்கத்ராம் சர்மா, தகவல் தொழில்நுட்பத்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட குமார் ஜெயந்த், கூட்டுறவு மற்றும் உணவுத்துறை செயலாளராக நியமிக்கப்பட்ட ராதாகிருஷ்ணன் ஆகியோர் கடந்த 3 முதல் 6 மாதங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வளவு குறுகிய இடைவெளியில் ஓர் அதிகாரியின் செயல்பாட்டை எவ்வாறு மதிப்பிட முடியும்?

பள்ளிக்கல்வித்துறை செயலாளராக இருந்தவர்கள் கடந்த சில மாதங்களில் 4 முறை மாற்றப்பட்டுள்ளனர். உயர்கல்வித்துறை செயலாளராக இருந்த கோபால் கடந்த சில மாதங்களில் 4 முறை பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவை அனைத்துக்கும் என்ன அடிப்படை? வருவாய் நிர்வாக ஆணையராக நியமிக்கப்பட்டிருந்த ராஜேஷ் லகானி அடுத்த சில வாரங்களில் மத்திய அரசுப் பணிக்கு சென்று விட்டார்.

மேலும் பல இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளும் மத்தியப் பணிக்கு செல்ல விண்ணப்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் தமிழ்நாட்டில் பணியாற்ற விரும்பவில்லை என்று தெரிகிறது. இவை நல்ல அறிகுறிகள் அல்ல.

ஒரு துறையில் செயலாளராக நியமிக்கப்படுபவர் அத்துறை குறித்த அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்வதற்கு குறைந்தது இரு மாதங்கள் தேவை. அதன் பிறகு தான் அவர்கள் முழு வீச்சில் செயல்படத்தொடங்குவார்கள். அதற்குள்ளாகவே அவர்களை பணியிட மாற்றம் செய்து புதிய பணியில் அமர்த்தும் போது அரசு நிர்வாகத்தின் செயல்திறன் பாதிக்கப்படும். இத்தகைய அணுகுமுறையை தமிழக அரசு கைவிட வேண்டும்.

காவல்துறை தலைமை இயக்குநர் பணியில் அமர்த்தப்படுபவர்கள் அந்தப் பதவியில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டு உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் அந்தப் பதவியில் நியமிக்கப்படுவோருக்கு 2 ஆண்டுகள் உறுதி செய்யப்பட்ட பணிக்காலம் வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டிருக்கிறது. அரசுத் துறை செயலாளர் பதவிகளும் காவல்துறை தலைமை இயக்குநர் பணிக்கு இணையான முக்கியத்துவம் கொண்டவை தான் என்பதால் அவற்றுக்கும் 2 ஆண்டு உறுதி செய்யப்பட்ட பணிக்காலம் வழங்க தமிழக அரசு முன்வர வேண்டும்." எனத் தெரிவித்துள்ளார்.

## பழைய ஒய்வூதிய திட்டம் கோரி அரசு ஊழியர்கள் விடிய விடிய போராட்டம் - தமிழகம் முழுவதும் 1 லட்சம் பேர் பங்கேற்பு



சென்னை: பிப்-13

பழைய ஒய்வூதிய திட்டத்தை நிறைவேற்றக்கோரி அரசு ஊழியர்களின் தர்ணா போராட்டம் விடிய, விடிய நடைபெற்றது. இதில் தமிழகம் முழுவதும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தமிழகத்தில் 14 லட்சத்துக்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் பணியாற்றி வரும் நிலையில், அரசு ஊழியர்களுக்கு புதிய ஒய்வூதிய திட்டத்தை ரத்து செய்து, பழைய ஒய்வூதிய திட்டத்தை அமல்படுத்தக்கோரி கடந்த 20 ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கத்தினர் தொடர்ந்து பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கடந்த அதிமுக ஆட்சியில் பழைய ஒய்வூதிய திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கான ஆணையம் 2016-ல் அமைக்கப்பட்டிருந்தது. பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு அந்த ஆணையம் அறிக்கை தாக்கல் செய்த நிலையில் இதுவரை பொதுவெளியில் அந்த அறிக்கை வெளியிடப்படவில்லை.

இதையொட்டி அதிமுக ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் கலந்து கொண்ட திமுக, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஓராண்டில் பழைய ஒய்வூதிய திட்டத்தை நிறைவேற்றித் தருவோம் என்று கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலின்போது வாக்குறுதி கொடுத்தது. இந்நிலையில் ஆட்சிக்கு வந்த 4 ஆண்டுகளாகிய நிலையில் பழைய ஒய்வூதிய திட்டத்தை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காதது அரசு ஊழியர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்நிலையில் பழைய ஒய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவது தொடர்பாக ஐஏஎஸ் அதிகாரிகள் அடங்கிய ஒரு குழுவை தமிழக அரசு தற்போது அமைத்திருக்கிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், பழைய ஒய்வூதிய திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வலியுறுத்தியும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் சார்பில் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் 24 மணி நேர தர்ணா போராட்டம் நேற்று முன்தினம் காலை தொடங்கியது. இதில் அரசு ஊழியர் சங்கத்துடன் 64 துறை சங்கங்களும் இணைந்து பங்கேற்றன.

தமிழகம் முழுவதும் நேற்று காலை 10 மணி வரை நடந்த போராட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக சங்கத்தினர் தெரிவித்தனர். சென்னை சேப்பாக்கத்தில் நடந்த போராட்டத்தில் 500-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்தனர். இரவிலும் தொடர்ந்த போராட்டத்தில் அங்கே உறங்கிய ஊழியர்கள், காலையில் மீண்டும் எழுந்து கோஷங்களை எழுப்பி போராட்டத்தை தொடர்ந்தனர். இவ்வாறு விடிய விடிய நடந்த போராட்டத்தை காலை 10 மணிக்கு முடித்துக் கொண்டு ஊழியர்கள் கலைந்து சென்றனர்.

கோரிக்கைக்கு அரசு செவிசாய்க்காத பட்சத்தில் அடுத்தக்கட்டமாக வரும் 14-ம் தேதி தாலுகா அளவில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளதாக தெரிவித்தனர். இதுதவிர, வரும் 25-ம் தேதி மாவட்ட தலைநகரங்களில் ஜாக்டோ-ஜியோ சார்பில் மறியல் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், மார்ச் 19-ம் தேதி தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சங்கம் சார்பில் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய போராட்டங்களுக்கு பிறகும் தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணாவிட்டால் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட போவதாகவும் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# எலியட்ஸ் கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான பாதை: உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை: பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பாதையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

பின்னணிப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் கடந்த 2020-ம் ஆண்டு மறைந்தார். அவரது புகழைப் போற்றும் வகையில் அவர் வாழ்ந்த காம்தார் நகர் வீதிக்கு அவரது பெயரை சூட்ட வேண்டுமென எஸ்.பி.பாலசுப்ரமணியத்தின் மகன் எஸ்.பி.சரண் முதல்வரிடம் கோரிக்கை வைத்திருந்தார்.

அவரது கோரிக்கையை ஏற்று நுங்கம்பாக்கம் காம்தார் நகர் முதன்மைச் சாலைக்கு எஸ்.பி.பாலசுப்ரமணியம் சாலை என பெயர் சூட்டப்பட்டது. புதிதாக பெயர் சூட்டப்பட்ட சாலையின் பெயர் பலகையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

அதேபோல் மெரினா கடற்கரையில் அனைவரையும் போல மாற்றுத் திறனாளிகளும் மணல் பரப்பில் வீல் சேருடன் கடல் அருகே சென்று அதன் அழகை ரசிக்கும் வகையிலும், கடல் நீரில் கால் நனைக்கும் வகையிலும், கான்கிரீட் அல்லாத மரப்பலகையால் ரூ.1 கோடி செலவில் சிறப்பு பாதை மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டு, கடந்த 2022-ம் ஆண்டு திறக்கப்பட்டது.

இதற்கு கிடைத்த வரவேற்பை தொடர்ந்து பெசன்ட் நகர் கடற்கரையிலும் இதுபோன்ற மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பாதை அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்தது.

அதன்படி சென்னை பெசன்ட்நகர் எலியட்ஸ் கடற்கரையில் அமைந்துள்ள கார்ல் ஸ்மித் நினைவுச் சின்னம் அருகே, மாற்றுத் திறனாளிகளுக்காக ரூ.1.61 கோடியில் சிறப்பு பாதை அமைக்கும் பணிகளை கடந்த ஆகஸ்ட் மாதம் முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்த நடைபாதை பாலமானது 190 மீட்டர் நீளம், 2.80 மீட்டர் அகலத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இதனை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறுகையில், ``திருவான்மியூர் கடற்கரையிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு பாதை விரைவில் அமைக்கப்படவுள்ளது. இதற்காக டெண்டர் விடப்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மாநகராட்சி மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், ஆணையர் ஜெ. குமரகுருபரன், துணை ஆணையர் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, எம்எல்ஏ எழிலன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தனியார் மூலம் இயக்கும் வகையில் 600 தாழ்தள மின்சார பேருந்துகளுக்கு டெண்டர் வெளியீடு

சென்னை: சென்னையில் தனியார் மூலம் இயக்கும் வகையில் 600 மின்சார தாழ்தள பேருந்துகளைக் கொள்முதல் செய்வதற்கான டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது.

மாநகர போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் வெளியிட்ட டெண்டர் அறிவிப்பில் கூறியிருப்பதாவது: மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் 600 தாழ்தள மின்சாரப் பேருந்துகள் கொள்முதல் செய்யப்படவுள்ளன. இதனை தயாரித்து வழங்குவதோடு, பராமரித்து இயக்க கூட்டு ஒப்பந்த அடிப்படையில் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. இதற்கு விருப்பமுள்ள நிறுவனங்கள் இணையவழியில் ஏப்.3-ம் தேதிக்குள்விண்ணப்பிக்கலாம்.

அதன்படி, 400 ஏசி பேருந்துகளும், 200 குளிர்சாதன வசதியில்லா பேருந்துகளும் தயாரித்து வழங்க வேண்டும். இதில் நடத்துநர்கள் மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் நியமிக்கப்படுவர். இதர பணிகளை டெண்டரில் தேர்வாகும் நிறுவனம் கவனித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# போரூர் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததை கண்டித்து நடிகர் கஞ்சா கருப்பு போராட்டம்



போரூரில் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் இல்லாததைக் கண்டித்து நோயாளிகளுடன் நடிகர் கஞ்சா கருப்பு போராட்டத்தில் ஈடுபட்டது பரபரப்பை ஏற்படுத்தியது.

சென்னை போரூர் அடுத்த சின்ன போரூர் பகுதியில் சென்னை மாநகராட்சி நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. நேற்று காலை 7 மணியளவில் புறநோயாளிகள் சீட்டு வாங்கிய ஏராளமான நோயாளிகள் மருத்துவரைப் பார்க்க காத்திருந்தனர். மருத்துவர்கள் யாரும் வராததால் ஆத்திரமடைந்த நோயாளிகள் செவிலியர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். கால் வலிக்கு சிகிச்சைக்கு வந்த நடிகர் கஞ்சா கருப்பும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு போராட்டத்தில் ஈடுபட்டார். இதனால், மருத்துவமனையில் பரபரப்பு ஏற்பட்டது. எப்போது வந்தாலும் இங்கு மருத்துவர்கள் சரியாக இருப்பது இல்லை என்று நோயாளிகள் தெரிவித்தனர்.

நடிகர் கஞ்சா கருப்பு கூறுகையில், ``தனியார் மருத்துவமனையில் 24 மணி நேரமும் மருத்துவர்கள் இருக்கும் நிலையில், அரசு மருத்துவமனையில் ஏன் மருத்துவர்கள் இருப்பதில்லை. அரசு மருத்துவமனைக்கு வரக்கூடிய நபர்களின் உயிர் என்றால் அலட்சியமா? தலைக்காயம், நாய்க்கடி மற்றும் முதியவர்கள் சிகிச்சைக்கு வந்துள்ளனர். ஆனால், மருத்துவர்கள் இல்லாதது வேதனையாக உள்ளது. மக்களுக்காக தானே மருத்துவமனை. இதற்காகத்தானே மக்கள் ஓட்டு போடுகிறார்கள். முதல்வரும் சுகாதாரத் துறை அமைச்சரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.

# தமிழகத்தில் பிப்.10-ம் தேதி ஒரு நாளில் பத்திரப்பதிவு மூலம் ரூ.238 கோடி வசூல்: அமைச்சர் மூர்த்தி தகவல்

தமிழகத்தில் பிப்.10-ம் தேதி ஒரு நாள் மட்டும் பத்திரப்பதிவு மூலம் ரூ.237.98 கோடி வசூலாகி, புதிய மைல் கல் எட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கடந்த பிப்.10-ம் தேதி திங்கள்கிழமை அதிகளவில் பத்திரப்பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கும்படி பொதுமக்களிடம் இருந்து கோரிக்கைகள் பெறப்பட்டன. அதை ஏற்று பிப்.10-ம் தேதி ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100-க்கு பதில் 150 டோக்கன்களும் இரண்டு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 200-க்கு பதில் 300 டோக்கன்களும் அதிகளவில் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100-க்கு பதில் 150 சாதாரண டோக்கன்களுடன், ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்கள் மற்றும் கூடுதலாக 4 டோக்கன்கள் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வழங்க உத்தரவிடப்பட்டது.

இந்த 2024-25-ம் நிதியாண்டில் கடந்தாண்டு டிச.5-ம் தேதி ஒரேநாளில் இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.238.15 கோடி வருவாய் ஈட்டப்பட்டது. அதைத்தொடர்ந்து, அதிகரிக்கப்பட்ட முன்பதிவு டோக்கன்களை பொதுமக்கள் பயன்படுத்தியதால், இந்தாண்டு பிப்.10-ம் தேதி 23,421 பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு இதே நிதியாண்டில் இரண்டாவது முறையாக அரசுக்கு ரூ.237.98 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒருநாள் வருவாய் வசூலில் 2-வது முறையாக இதே ஆண்டில் அதிக வசூல் செய்து புதிய மைல்கல்லை வருவாய்த்துறை எட்டியுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# டான் படத்துடன் ஒப்பீடு - டிராகன் இயக்குநர் விளக்கம்




'டான்' படத்துடன் ஒப்பிட்டு வந்த கருத்துகளுக்கு 'டிராகன்' இயக்குநர் விளக்கம் அளித்துள்ளார்.

இணையத்தில் 'டிராகன்' படத்தின் ட்ரெய்லருக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. அதே வேளையில் பலரும் இதனை 'டான்' படத்துடன் ஒப்பிட்டு கருத்துகள் தெரிவித்து வருகிறார்கள். 'டிராகன்' படத்தினை விளம்பரப்படுத்த படக்குழுவினர் பேட்டியளித்து வருகிறார்கள். அதில் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்துவிடம் 'டான்' படத்துடனான ஒப்பீடு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதில் அளித்த அஸ்வத் மாரிமுத்து, "டான் படம் வெளியாகி இரண்டு ஆண்டுகளாகிறது. அதே படத்தை யாரேனும் திரும்ப எடுப்பார்களா?. 'ஓ மை கடவுளே' என்ற மக்களுக்கு பிடித்த படத்தை இயக்கியவன் நான். பிரதீப் ரங்கநாதனோ 'லவ் டுடே' என்ற ரூ.100 கோடி வசூல் கொண்ட படத்தை இயக்கி நடித்தவர். நாங்கள் இணைந்து ஏன் 'டான் 2' எடுக்கப் போகிறோம்?


கல்லூரி, நிறைய மாணவர்கள், கலர்ஃபுல்லான காட்சிகள் என பார்க்கும்போது 'டான்' மாதிரி தெரிகிறது. அப்படத்தின் கதை என்ன, கல்லூரியில் அராஜமாக இருக்கும் ஒருத்தன் எப்படி வாழ்க்கையில் ஜெயிக்கிறான் என்பதுதான். ஆனால் 'டிராகன்' கதை அதுவல்ல. படத்தில் பெரிய சர்ப்ரைஸ் ஒன்று உள்ளது. அதை படத்தின் ட்ரெய்லரில் இருந்து மறைத்துவிட்டோம்.

படம் வெளியான உடன் இப்படி பேசிய அனைவருமே மாற்றிப் பேசுவார்கள். 'ஓ மை கடவுளே' எப்படி வித்தியாசமாக இருந்ததோ, அதே மாதிரிதான் 'டிராகன்' படமும் வித்தியாசமாக இருக்கும். அடுத்த சிம்பு படத்தின் கதையும் வித்தியாசமானது தான்" என்று தெரிவித்துள்ளார்.

ஏஜிஎஸ் நிறுவனம் தயாரித்துள்ள 'டிராகன்' படத்தில் பிரதீப் ரங்கநாதன், அனுபமா பரமேஸ்வரன், கயாடு லோகர், மிஷ்கின், கே.எஸ்.ரவிக்குமார், கவுதம் மேனன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அஸ்வத் மாரிமுத்து இயக்கியுள்ள இப்படத்துக்கு லியோன் ஜேம்ஸ் இசையமைத்துள்ளார். பிப்ரவரி 21-ம் தேதி இப்படம் திரைக்கு வரவுள்ளது.

# பழைய நினைவுகளைப் பகிர்ந்த சூரி!





படப்பிடிப்புக்கு இடையே வீடியோ பதிவின் மூலம் பழைய நினைவுகளை பகிர்ந்துள்ளார் நடிகர் சூரி.

திருச்சியில் 'மாமன்' படத்தின் படப்பிடிப்பில் மும்முரமாக இருக்கிறார் சூரி. மார்ச்சில் படப்பிடிப்பை முடித்து கோடை விடுமுறைக்கு வெளியிட்டு விட வேண்டும் என்ற முனைப்பில் படக்குழு பணிபுரிந்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்புக்காக ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளார் சூரி. அப்போது எதிரில் சுவற்றில் வெள்ளை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

அதனை வீடியோவாக எடுத்து தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார் சூரி. அத்துடன், "சுவர்களில் நிறங்களை பதித்தேன் - இன்று திரையில் உணர்வுகளை பதிக்கிறேன்!" எனவும் குறிப்பிட்டுள்ளார். நடிகராகும் முன்பு பல்வேறு வேலைகளில் இருந்துள்ளார் சூரி. அப்போது வெள்ளை அடிக்கும் வேலையை பார்த்திருப்பதை தான் இந்தப் பதிவின் மூலம் நினைவுகூர்ந்துள்ளார்.

'மாமன்' படத்தினை முடித்துவிட்டு, எல்ரெட் குமார் தயாரிக்கும் படத்தில் கவனம் செலுத்தவுள்ளார் சூரி. இதனை 'செல்ஃபி' படத்தின் இயக்குநர் மதிமாறன் இயக்கவுள்ளார். இதற்கான முதற்கட்டப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

# ரஞ்சி கோப்பை: அரை இறுதிக்கு முன்னேறியது மும்பை, குஜராத் அணிகள்

ராஜ்கோட்: ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரின் கால் இறுதி ஆட்டத்தில் சவுராஷ்டிரா அணியை இன்னிங்ஸ் மற்றும் 98 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அரை இறுதி சுற்றுக்கு முன்னேறியது குஜராத் அணி.

ராஜ்கோட்டில் நடைபெற்று வந்த கால் இறுதி ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் சவுராஷ்டிரா 216 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதேவேளையில் குஜராத் அணி 511 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக உர்வில் பட்டேல் 140, ஜெய்மீட் பட்டேல் 103 ரன்கள் விளாசினர். 295 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்ஸை விளையாடிய சவுராஷ்டிரா அணி நேற்றை 4-வது நாள் ஆட்டத்தில் 62.1 ஓவர்களில் 197 ரன்களுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக ஹர்விக் தேசாய் 54, ஜெயதேவ் உனத்கட் 29, ஷெல்டன் ஜாக்சன் 27, ஷிராக் ஜானி 26 ரன்கள் சேர்த்தனர். நட்சத்திர பேட்ஸ்மேனான சேதேஷ்வர் புஜாரா 2 ரன்களில் வெளிறினார். குஜராத் அணி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர்களான பிரியஜித்சிங் ஜடேஜா 4, அர்ஸான் நக்வஸ்வாலா 3 விக்கெட்களையும், சுழற்பந்து வீச்சாளரான ரவி பிஷ்னோய் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர். இன்னிங்ஸ் மற்றும் 98ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற குஜராத் அணி அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தமிழகம் தோல்வி: நாக்பூரில் நடைபெற்ற கால் இறுதி ஆட்டத்தில் விதர்பா - தமிழ்நாடு அணிகள் மோதின. இதன் முதல் இன்னிங்ஸில் விதர்பா 353 ரன்களும், தமிழ்நாடு 225 ரன்களும் எடுத்தன. 128 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்ஸை விளையாடிய விதர்பார் 272 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக யாஷ் ரத்தோடு 112, ஹர்ஷ் துபே 64 ரன்கள் விளாசினர். இதையடுத்து 401 ரன்கள் இலக்குடன் பேட் செய்த தமிழ்நாடு அணி நேற்றைய 4-வது நாள் ஆட்டத்தில் 61.1 ஓவர்களில் 202 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக சோனு யாதவ் 57, பிரதோஷ் ரஞ்ஜன் பால் 53 ரன்கள் சேர்த்தனர். முகமது அலி 10, நாராயண் ஜெகதீசன் 18, சாய் சுதர்சன் 2, விஜய் சங்கர் 5, பூபதி குமார் 0, ஆந்த்ரே சித்தார்த் 15, முகமது 12 ரன்களில் வெளியேறினர். விதர்பா அணி சார்பில் ஹர்ஷ் துபே, நச்சிகேத் பூதே ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர். 198 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற விதர்பா அணி அரை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மும்பை அணி அபாரம்: கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்ற கால் இறுதி ஆட்டத்தில் மும்பை - ஹரியானா அணிகள் மோதின. இதன் முதல் இன்னிங்ஸில் மும்பை 315 ரன்களும், ஹரியானா 301 ரன்களும் எடுத்தன. 14 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்ஸை விளையாடிய மும்பை அணி 339 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தது. கேப்டன் அஜிங்க்ய ரஹானே 108, சூர்யகுமார் யாதவ் 70, ஷிவம் துபே 48 ரன்கள் விளாசினர்.



354 ரன்கள் இலக்குடன் பேட் செய்த ஹரியானா நேற்றைய 4-வது நாள் ஆட்டத்தில் 57.3 ஓவர்களில் 201 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக லக்சய் தலால் 64, சுமித் குமார் 62 ரன்கள் சேர்த்தனர். மும்பை அணி தரப்பில் ராய்ஸ்டன் தியாஸ் 5, ஷர்துல் தாக்குர் 3, தனுஷ் கோட்டியன் 2 விக்கெட்கள் வீழ்த்தினர். 152 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற மும்பை அணி அரை இறுதி சுற்றில் கால்பதித்தது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066